# பரவாயில்லை

சிறகுகள் வலிக்கட்டும் பரவாயில்லை,
அளக்கட்டும் அவை வானத்தின் எல்லை;

காலங்கள் பார்க்கட்டும் கவலைகள் எல்லை,
கடந்து போவோம் பரவாயில்லை;

சோகங்கள் இருக்கட்டும் பரவாயில்லை,
இருந்தும் விரியட்டும் நம்பிக்கை எல்லை;

வம்புகள் சோதிக்கட்டும் பொறுமையின் எல்லை,
விட்டுக் கொடுப்போம் பரவாயில்லை;

வழக்குகள் வரட்டும் பரவாயில்லை,
வந்தும் வளரட்டும் புரிதலின் எல்லை;

காயங்கள் சுட்டட்டும் அனுபவ எல்லை,
அமைதியாய் இருப்போம் பரவாயில்லை;

வேதங்கள் நிறையட்டும் பரவாயில்லை,
தொடுவோம் நன்றியுடன் வாழ்க்கையின் எல்லை...

அ. சொ
பெங்களூர்
5 நவம்பர் 2026.